ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2412/34 - 2024 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2024.11.29
2412/34 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/ 78 (xv) (இ)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் அமைச்சர் ஹரிணி அமரசூரிய ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தை தாபிக்கின்றதும், (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 1986 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 420/ 25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, (2007, நவெம்பர் 14 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "வணிகம் மற்றும் முகாமைத்துவப் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற "3, முகாமைத்துவத் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

"4, கணக்கியல் மற்றும் நிதித் துறை"

**ஹரிணி அமரசூரிய,**
கல்வி, விஞ்ஞானம் மற்றும்
தொழினுட்பவியல் அமைச்சர்.

கொழும்பு,
2024, நவெம்பர் 13.

EOG11 - 0186